3. கார் நாற்பது

நூல் வரலாறு.

ஆசிரியர்: **மதுரைக் கண்ணங் கூத்தனுர்**

தந்தையார்: **கண்ணன்**

நாடு: **பாண்டி நாடு**

காலம்: **கி. பி. 750 — 775.**

இந்நூல் நானூற்று என்ற தொகை நூலில் மூன்ருவதாக உள்ளது. இந்நூல் 40 செய்யுட்களைப் பெற்றது. இது பதினெண் கீழ்க்கணக்கு நூலில் கடவுள் வாழ்த்துப் பெருத நூல்களில் ஒன்று. இன்னிசை, நேரிசை வெண்பாக்களால் இயற்றப் பட்டுள்ளது. கார்காலத்தின் இயல்புகளை எடுத்துக் கூறுகிறது. இது அகப்பொருள் பற்றியதாகும். ஆகவே இந்நூல் காலமும் எண்ணும் பெற்று நூற்குப் பெயராயிற்று என்க.

இந்நூலின் ஆசிரியர் கூத்தனுர் என்பதும், கண்ணன் என்போரின் மகனுவார் என்பதும் 'மதுரைக் கண்ணங் கூத்தனுர்' என்பதால் அறியப்படுகிறது.

இவரது ஊர் மதுரை என்பதால் இவரைப் பாண்டிய நாட்டினர் எனக் கூறப்பட்டது.

சமயநிலை: முதற் செய்யுளில் 'பொரு கடல்வண்ணன்' என்று திருமாலைப் பாடியிருப்பதாலும், பின்னர் 'நாஞ்சில் வலவன்' (19) என்று பலராமனைக் குறிப்பிடுவதாலும் இவரை வைணவர் என்பர். ஆனுல் சிவனுக்குரிய கார்த்திகைத் தீபத்தைப் பற்றிக் குறிப்பிடுவதை நோக்கின், இவர் சர்வ சமயக் கொள்கையினர் எனக் கொள்ளுதலே ஏற்புடைத்து.

காலம்: இன்னா, இனியவை நாற்பதுக்கு அடுத்தும், களவழி நாற்பதுக்கு முன்னும் வைத்திருக்கும் முறையை நோக்கி இவரது காலத்தை அமைக்கலாமேயன்றி, வேறுவகை காண இயலவில்லை. ஆதலின் இவரது காலம் கி. பி. 750 — 775க்கு இடைப்பட்ட காலமெனல் சால்புடைத்து.

இந்நூல் அகத்திணையில் முல்லைத்திணையின் பாற்பட்டது. முல்லைத் திணையின் முதற்பொருளாகிய கார்காலத்தை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. முல்லையாவது இருத்தலும் இருத்தல் நிமித்தமுமாகும். அஃதாவது தலைவன் யாதேனும் ஒரு காரணம் பற்றிப் பிரிய, தலைவி அவன் வரும் வரை ஆற்றியிருத்தலைக் குறிக்கும். அதுபோது தலைவன் இன்னபோது வருவேன் என்று கூறிச் செல்வதும், குறித்த காலம் வந்தும், அவன்வாராது கடப்பானேயானால், அதுபோழ்து தலைவி ஆற்றாமை மிக்கு வருந்தும் நிலையும், அது காரணமாக அவளது கற்பின் அருமையும், அன்பின் பெருமையும் வெளிப்பட அமைத்துக் கூறுதலாகும்.

இந்நூலின்கண் 'கார்காலத்து வருவேன்' என்று தலைமகன் கூறிச் சென்றானாக, கார்காலம் வந்தும், அவன் வாராமையினால் அவள் ஆற்றும் அருமைகளைச் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் திறம் போற்றற்குரியது. ஒவ்வொரு செய்யுளிலும் கார் காலத்தின் தன்மைகள் அழகழகாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. உவமைகள் உள்ளத்தை உருக்கும் பான்மையின. இந்நூலின் அருமை பெருமைகளை அறிந்த வீரசோழியம் முதலிய நூல்கள் எடுத்தாண்டு பெருமை தந்துள்ளன.

வானவில்

தோழி தலைமகளை நோக்கி, "வானவில் தோன்றி மழை பொழியும்போது வருவதாகக் கூறிச் சென்றார் தலைவர். மழையும் சொரியலாயிற்று. அவர் வந்திடுவார்" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்[கு]ஊன்றித் தீம்பெயல் தாழ
வருதும் எனமொழிந்தார்; வாரார்கொல்? வானம்
கருஇருந்(து) ஆலிக்கும் போழ்து. *1*

ப-ரை: பொருகடல் - கரையை மோதும் கடல் அலையினது, வண்ணன் - நிறத்தையுடைய திருமால், மார்பில் - மார்பினில், புனை - அணிந்த, தார்போல் - பூமாலைபோன்ற, திருவில் - வானவில்லை, விலங்கு - குறுக்காக, ஊன்றி - நிறுத்தி, தீம் - இனிய, பெயல் - மழை, தாழ - வீழ, வருதும் - வருவேம், என - என்று, மொழிந்தார் - சொல்லிச் சென்றவர்; வானம் - மேகமானது, கரு இருந்து - கருக்கொண்டு, ஆலிக்கும் - மழைத் துளிகளைச் சொரியும், போழ்து - இக்காலத்தில், வாரார்கொல் - வாராரோ? (வருவார்).

க-ரை: 'திருமாலின் மாலை போல வானவில் தோன்றி, மழை பொழியும்போது வருவேம்' என்றார். 'இப்போது கார்காலம் தோன்றிவிட்டது. அவர் வருவார்' என்று தலைவியைத் தோழி ஆற்றுவித்தாள்.

திருவில் - வானவில். விலங்கு - குறுக்கு. 'கொடும் புணரி விலங்குபோழ'- (77-அடி) மதுரைக் காஞ்சியில் இப்பொருள் வருதலை அறிக. 'பொருகடல்............திருவில் விலங்கூன்றி' என்பது, திருமாலின் மார்பில் பன்னிற மலர்களான மாலை மிளிர்வதைப் போன்று வானின் குறுக்கே பன்னிறங்கொண்ட வானவில் விளங்கியதைக் குறித்தது. பொருவில் - வினைத்தொகை. தாழ - வினையெச்சம். வருவார் - குறிப்பால் கொண்டது.

மின்னல் தூது

தோழி தலைமகளைப் பார்த்து, "வேனிலின் வெம்மை அகன்று விட்டது. காடுகள் மலர்களால் அழகு செய்கின்றன. அதுமட்டுமா! இதோ நம் தலைவர் அனுப்பிய தூது போல வானம் மின்னுகிறது" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

கடுங்கதிர் நல்கூரக், கார்செல்வம் எய்த,
நெடுங்காடு நேர்சினை ஈனக், — கொடுங்குழாய்!
இன்னே வருவர் நமரென்[று] எழில்வானம்
மின்னும் அவர்தூ[து] உரைத்து. 2

ப-ரை: கொடுங்குழாய்-வளைந்து தொங்குகின்ற குழையை யுடையாய்! கடும் கதிர் - சூரியனின் வெவ்விய கதிர், நல்கூர - மெலிவடைய, கார் - கார்காலம், செல்வம் - வளப்பத்தை, எய்த - பொருந்த, நெடும் காடு - பரந்த காடெல்லாம், நேர் சினை - மிகுந்த அரும்புகளை, ஈன - கொடுக்க, எழில் - அழகு மிகுந்த கரிய நிறத்தினையுடைய, வானம் - மேகமானது. நமர் - நம்மவராகிய தலைவர், இன்னே - இப்பொழுதே, வருவர் என்று - வருவார் என்று, அவர் - நம் தலைவரது, தூது - தூதாக, உரைத்து - அறிவித்தல்போல், மின்னும் - மின்னுகின்றது!

கரை-: கோடை கழிய, கார்காலத்தில் பூக்கும் மலர்கள் எங்கும் மலர, தலைவர் வருவர் என்பதை அவர் அனுப்பிய தூதுபோல வானம் மின்னுகின்றது என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

கடுங்கதிர் - சூரியன்; அன்மொழித் தொகை. கொடுமை - வளைவு. 'கொடுவாள்' என்பதுபோல, வளைவு - ஈண்டு வளைந்து தொங்கலைக் குறித்தது. குழை - ஒரு வகைக் காதணி. நேர் - மிகுதி. எழில் - அழகு; எழுச்சி.

வருத்தும் மழை

தோழி, "அந்தோ! பாதிரிப் பூக்கள் காற்றால் அலக்கழிக்கவும், ஆலங்கட்டிகள் வீழ்ந்து சிதறவும், மழையோ நேற்றுமுதல் தொடங்கிவிட்டது. தலைவி யாது செய்வாள்! எவ்வாறு அவளை ஆற்றுவிப்பது" என்று தனது ஆற்றாமையை உரைத்தாள்.

வரிநிறப் பாதிரி வாட, வளிபோழ்ந்[து]
அயிர்மணல் தண்புறவின் ஆலி — புரள,
உரும்இடி வானம் இழிய, எழுமே
நெருநல் ஒருத்தி திறத்து. 3

ப-ரை: வரிநிறம் - வரியொடு நிறமும் உடைய, பாதிரி - பாதிரிப் பூக்கள், வளி - காற்று, போழ்ந்து - ஊடறுக்கப் பட்டு, வாட - வாடவும், அயிர் மணல் - மென்மையான மணலுடைய, தண்புறவின் - குளிர்ந்த காட்டின் கண், ஆலி -

ஆலங்கட்டிகள், புரள - சிதறிவீழவும், உரும் இடி - முழக்கத்துடன் இடிக்கும், வானம் - மேகமானது, நெருநல் - நேற்று முதலாக, ஒருத்தி திறத்து - (தனித்திருக்கும்) ஒருத்தியிடத்து (அவளை வருத்தல் வேண்டி), இழிய - மழை பொழிய, எழும் - தொடங்கிவிட்டது.

க—ரை: பாதிரிப் பூக்கள் வாடவும், ஆலங்கட்டிகள் சிதறி வீழவும், இடியொடு வானம் நேற்று முதல் மழையும் பொழியத் தொடங்கியது. இது தலைவியை இன்னும் வருத்தத்தில் செலுத்தும். என் செய்வது! எனத் தோழி தன் ஆற்றாமையைக் கூறினாள்.

பாதிரி - இது வேனிற்பூ. வெண்மை, பொன்மை, மங்கிய செம்மை முதலிய நிறங்களில் உண்டு. போழ்தல்-ஊடறுக்கப்படல். அயிர் மணல் - நுண்மணல்; இளமணல். ஆலி - ஆலங்கட்டி; நீர் திரண்டகட்டி; பனிக்கட்டி.

பசலைக்கு மருந்து

தோழி, ''மயில் ஆடவும், கொன்றைகள் பூக்கவும், வண்டுகள் மலர்களை வட்டமிட்டுப் பாடவும் கார்காலம் வந்தது உறுதியாயிற்று. ஆதலின் நம் தலைவரும் வருவர். நின் பசலைக்கு அவ்வருகையே மருந்தாயிற்று'' என்று தலைவியை ஆற்றுவித்தாள்.

ஆடு மகளிரின் மஞ்ஞை அணிகொளக்,
காடும் கடுக்கை கவின்பெறப் பூத்தன;
பாடுவண்[டு] ஊதும் பருவம்; பணைத்தோளி!
வாடும் பசலை மருந்து. 4

ப-ரை: ஆடும் - கூத்து ஆடும், மகளிரின் - மகளிரைப் போல, மஞ்ஞை - மயில்கள், அணிகொள - அழகுபெற, காடும் - காடுகளும், கடுக்கை - கொன்றைகள், கவின்பெற - அழகுபெற, பூத்தன - மலர்ந்தன; பாடு வண்டு - பாடுகின்ற வண்டுகளும், ஊதும் - (மலர்களைச் சூழ்ந்து வட்டமிட்டு) ஒலிக்கும்; (ஆதலால்) பணைத்தோளி - மூங்கில்போலும் தோளினையுடையாய், பருவம் - இக்கார்காலமானது, வாடும் - வருத்துகின்ற, பசலை - பசலை நோய்க்கு, மருந்து - மருந்தாகும்.

க-ரை: 'மயில் ஆடவும், கொன்றைகள் பூக்கவும், வண்டுகள் பாடவும் கார்காலம் வந்ததை அறிவித்தது. ஆதலின் தலைவர் வருவார். இவைகள், நின் பசலை நீங்க மருந்தாகும்' எனத் தலைவியை ஆற்றுவித்தாள் தோழி.

மகளிரின் - இன் உவம உருபு. மயில்கள் ஆடலை ஆடு மகளிருக்கு உவமையாக்கப்பட்டது. மலர்களில் வண்டுகள் சூழ்ந்து வட்டமிட்டு ஒலிப்பதைப் பாடுவதாகக் குறித்துள்ளார்.

சொல் அஞ்சிச் சென்றூர்

தலைவியைத் தோழி, ''இதோ பார்! பட்டுப் பூச்சிகள் பரந்து தவழ்தலை. பொருள் தேடச் சென்ற நம் தலைவர் வருவது உறுதி'' எனப் பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

இகழுநர் சொல்அஞ்சிச் சென்றூர் வருதல்,
பகழிபோல் உண்கண்ணுய்! பொய்அன்மை; ஈண்
பவழம் சிதறி யவைபோலக் கோபம் [டைப்
தவழும் தகைய புறவு.

ப-ரை: பகழிபோல் - அம்புபோலும், உண் கண்ணுய் - கவர்ச்சியுடைய கண்களையுடையாய்! ஈண்டை - இவ்விடத்து, பவழம் - பவழமானது, சிதறியவை போல - சிந்தியவைபோல, புறவு - காடுகள், கோபம் - தாம்பலப் பூச்சிகள், தவழும் தகைய - பரந்துகிடக்கும் தகுதியையுடையனவாயின; (ஆதலால்) இகழுநர் - இகழ்வார் கூறும், சொல் - பழிச்சொல்லுக்கு, அஞ்சி - பயந்து, சென்றூர் - (பொருள் தேடச்) சென்ற நம் தலைவர், வருதல் - மீளவருதல், பொய் அன்மை - மெய்யாம்.

க-ரை: காடுகளெல்லாம் தாம்பலப் பூச்சிகள் பரந்து கார் காலத்தை உணர்த்திற்று. ஆதலின் பொருள் தேடச் சென்ற நம் தலைவர் விரைவில் மீளுதல் உண்மை, என்று தோழி தலைவியை ஆற்றுவித்தாள்.

முயற்சியாற் பொருள்தேடி, அறம் செய்யாதார் பழி பெறுவோராதலின் 'இகழுநற் சொல்அஞ்சி' என்றூர். சென்றூர் - வினையாலணையும் பெயர். பகழி - வடிவும் தொழிலும் பற்றிய உவமை. தலைமகள் வருத்த மிகுதியால் தான் அணிந்திருந்த பவழவடத்தை அறுத்துச் சிதறிஞல் என்பதைப் 'பவழம் சிதறி' எனக் குறித்துளது. கோபம் - கார் காலத்தில் தோன்றும் செந்நிறப் பூச்சிகள். தாம்பலப்பூச்சி, பட்டுப் பூச்சி என்பர். பொய் அன்மை - மெய்மை.

காலந் தாழ்க்காதீர்

தோழி தலைவியை விளித்து, 'வெகு தொலைவு சென்ற நம் தலைவரை, ஆங்குள்ள மேகமே இடித்துக்காட்டி, காலங்

தாழ்க்காதீர், செல்லும் என்று அறிவுறுத்தும்' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

தொடிஇட ஆற்ரு தொலேந்ததோள் நோக்கி,
வடுவிடைப் போழ்ந்(து)அகன்ற கண்ணுய்! வருந்தல்!
கடி(து)இடி வானம் உரறும், நெடுஇடைச்
சென்ருரை நீடல்மின் என்று. 6

ப-ரை: வடு இடை - மாவடுவின் நடுவே, போழ்ந்து - பிளந்தாற்போன்ற, அகன்ற - பரந்த, கண்ணுய் - கண்களே யுடையாய், கடிது இடி - கடுமையாக இடிக்கும், வானம் - மேகம், நெடு இடை - நெடிய வழியிடத்து, சென்ருரை - சென்ற நம் தலேவரை, நீடல் மின் என்று - காலந்தாழ்க்காதீர் என்று கூறி, உரறும் - இடிக்கும்; (ஆதலால்) தொடி இட ஆற்ரு - வளேயை அணியப் பொருது, (அது கழறும் நிலே), தொலேந்த - மெலிந்த, தோள் நோக்கி - தோள்களேப் பார்த்து, வருந்தல் - வருந்தாதே.

க-ரை: பொருள் தேடிச்சென்ற நம் தலேவரைக் காலந் தாழ்க்காதீர் என்று இடிகளே அறிவிக்கும். ஆதலின் மெலிந்த தோள்நோக்கி வருந்தாதே.

தொடிஇட ஆற்ரு தொலேந்ததோள் - இஃது உறுப்பு நலன் அழிந்ததைப் பிரிவால் குறித்தது. போழ்ந்தால் - போழ்ந்து என்று திரிந்து நின்றது. போழ்ந்து - என்பதில் போல் எனும் உவமஉருபும் தொக்கது. நெடுவிடை - மரூஉ. நெட்டிடை என்பது வழக்கு.

தகையாளன்

தோழி தலேவியிடம், "பொருள் தேடிச் சென்ற நம் தலேவரை, வேள்வித்தீ எழுப்பும் புகைபோல எப் பக்கமும் மேகம் மின்னி மழையைச் சொரிந்து, நினேவூட்டி அழைத்து வரும்" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

நச்சியார்க்(கு) ஈதலும், நண்ணர்த் தெறுதலும்,
தற்செய்வான் சென்ருர்த் தரூஉம்; தளரியலாய்!
பொச்சாப்(பு) இலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரும் மின்னும், மழை. 7

ப-ரை: தளர் இயலாய் - தளர்ந்த இயல்பினேயுடையாய், நச்சியார்க்கு - நம்மை விரும்பியவர்க்கு, ஈதலும் - கொடுத்த

லும், நண்ணூர் - (விரும்பாத) பகைவரை, தெறுதலும் - அழித்தலும், தற்செய்வான் - தாம் செய்வான் வேண்டி, சென்றூர் - சென்றவரை, பொச்சாப்பு - மறதி, இலாத - இல்லாத, புகழ் - புகழையுடைய, வேள்வித் தீ போல - வேள்வித் தீயைப்போல, எச்சாரும் - எப் பக்கமும், மின்னும் - மின்னுதலைச் செய்யும், மழை - மழையானது, தரும் - (அவரை அழைத்துக்கொண்டு) வரும்.

க-ரை: விரும்பியோர்க்களிக்கவும், வேண்டாரை அழிக்கவும், தன்புகழை நிலை நிறுத்தவும், பொருள்தேடச் சென்ற தலைவரை மழையே நம் நினைவை எழுப்பி அழைத்து வரும்.

அறம் செய்வதற்கும் பகை அழித்தலுக்கும் பொருள் தேடல் வேண்டும். அதனுல் பிரிதல் இன்றியமையாதது என்பதை 'நச்சியார்க்கீதலும் நண்ணூர்த் தெறுதலும்' என்ருர். 'தளர் இயலாய்' என்பது பிரிவினுல் உறுப்பு நலனழிந்ததை உணர்த்திற்று. 'தற்செயலான் சென்ருர்'- ஒருமைப் பன்மை மயக்கம். தரூஉம் - செய்யுளிசை அளபெடை. வேள்வித்தீ எப்பக்கமும் பரவல் போல் மழை பெய்தலும், தீயின் ஒளிபோல் மின்னல் மின்னுதலையும் உவமம் விளக்குகின்றது.

புறவே கூறும்

தோழி தலைவியிடம், ''புகழ்வேண்டிப் பொருள்தேடச் சென்ற நம் தலைவரைக் காயாமலர்ந்த காடு, நின் கண்ணை நினைவுறுத்தி அழைத்து வரும்'' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

மண்இயல் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்இயல் நல்லாய்! பிரிந்தார் வரல்கூறும்;
கண்இயல் அஞ்சனம் தோய்ந்தபோல் காயாவும்
நுண்அரும்(பு) ஊழ்த்த புறவு. 8

ப-ரை: பெண் இயல் நல்லாய் - பெண்தன்மைகொண்ட நல்லாய், மண் இயல் - மண்ணுலான, ஞாலத்து - உலகத்து, மன்னும் - நிலைபெறும், புகழ்வேண்டி - புகழை விரும்பி, பிரிந்தார் - பிரிந்துசென்ற நம் தலைவர், வரல் - மீண்டு வருதலை, கண் இயல் - கண்ணிற்கேற்ற, அஞ்சனம் - மை, தோய்ந்த போல் - உறைந்தது போல, காயா - காயாஞ்செடிகளும்,

நுண் அரும்பு - தனது சிறிய அரும்புகள், ஊழ்த்த - மலரப் பெற்ற, புறவு - காடுகளே, கூறும் - அறிவிக்கும்.

க-ரை: புகழை விரும்பிப் பொருள் தேடச் சென்ற நம் தலைவரை, ஆங்குள்ள காயாம்பூக்களே நம் நினைவை அறிவிக்கும்.

மண் இயல் ஞாலத்து - 'மண்டிணி ஞாலத்து' என்றார் மணிமேகலை ஆசிரியரும். பெண் இயல் - அச்சம், மடம், நாணம் என்பன. இதனைத் தொல்காப்பியர், "அச்சமு நாணு மடனுமுந் துறுதல், நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப' (களவியல் - 99 சூ.) என்றார். ஊழ்த்தல் - மலர்தல். இப் பொருளை - 'இணரூழ்த்து நாறு மலர்' (குறள் - 650) ஆல் அறிக. கண் இயல் அஞ்சனம் - கண்ணின் தன்மையான கருமை, குளிர்ச்சி முதலியன பெற்ற அஞ்சனம் என்க. தோய்ந்த - உறைந்த. தயிர் தோய்தல் - தயிர் உறைதல் என்பதை நோக்குக.

வளைகழன்ற வனிதை

தோழி தலைவியிடம், "இன்சொற் கூறிப் பிரிந்த தலைவரைக் கருவிளையும் தோன்றியுமே நினைவுகூட்டும். வருந்தற்க" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

கருவிளை கண்மலர்போல் பூத்தன; கார்க்(கு)ஏற்(று)
எரிவனப்(பு) உற்றன தோன்றி; — வரிவளை
முன்கை இறப்பத் துறந்தார், வரல்கூறும்
இன்சொல் பலவும் உரைத்து. 9

ப-ரை: வரிவளை - அழகிய வளைகள், முன் கை - முன்கையினின்று, இறப்ப - கழலுமென்று, இன் சொல் - இனிய சொற்கள், பலவும் உரைத்து - (பிரிவிற்காக)ப் பலவும் மொழிந்து, துறந்தார் - பிரிந்து சென்ற நம் தலைவரை, கண் மலர்போல் - நம் கண்போல, கருவிளை - கருவிளம் பூக்களும், பூத்தன - பூக்கலாயின; கார்க்கு ஏற்று - கார்காலத்திற்குப் பொருந்திய, தோன்றி - தோன்றிப் பூக்கள், எரி வனப்பு உற்றன - தீயினது செந்நிறத்தை பெற்று மலர்ந்தன; வரல் - (ஆதலின்) நம் தலைவர் வருதலை, கூறும் - (இவை) அறிவிக்கும்.

க-ரை: வளை கழலுமென்று அறிந்தும் இன் சொற் கூறிப் பிரிந்த தலைவரை, கருவிளைப் பூக்களும் தோன்றிகளும் நினைவுறுத்தி நம்மிடம் செல்லுமாறு அறிவிக்கும்.

தோன்றி - செங்காந்தள்; மணமற்றது. மருதோன்றி வேறு. இது மணமுடையது. 'சுடர்ப்பூந் தோன்றி' எனும் குறிஞ்சிப்பாட்டால் (90 - அடி) 'எரி வனப்பு' அறியப்படுகிறது. துறந்தார் - வினையாலணையும் பெயர்.

மேனிதளிர்ப்ப வரும்

தோழி தலைவியிடம், ''இடி முழக்கிற்கு எதிராக எருமை முழங்க, இதனைக் கண்ணுறும் தலைவர் விரைவில் வருவர் தேரேறி. நின்மேனி பூரிப்படையும்'' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

வான்ஏறு வானத்(து) உரற, வயமுரண்
ஆன்ஏற்(று) ஒருத்தல் அதனோ(டு) எதிர்செறுப்பக்
கான்யாற்(று) ஒலியில் கடுமான்தேர் என்தோழி
மேனி தளிர்ப்ப வரும். 10

ப-ரை: என் தோழி - எனது தோழியே, வான் ஏறு - இடி, வானத்து உரற - மேகத்தினிடம் முழக்க, வய - வலியினையும், முரண் - மாறுபாட்டினையுமுடைய, ஆன் ஏறு ஒருத்தல் - ஆண் எருமை, அதனோடு - அவ்விடியுடன், எதிர் செறுப்ப - எதிராக வெருள் (முழக்கம் செய்ய), கடுமான் தேர் - விரைந்த வேகங்கொண்ட குதிரை பூட்டப்பட்ட தேர். கான் யாற்று ஒலியின் - காட்டாற்றின் ஒலி போலும் ஒலியினையுடையதாய், மேனி - நின்மேனி, தளிர்ப்ப - தழைக்க, வரும் - வரும்.

க-ரை: இடிக்கெதிராக எருமை முழங்க, இதனைக் கண்ணுற்ற தலைவர் கடுவிசையுடன் தேர் ஏறி நின் உடல் பூரிக்க வருவார்.

வய - வலி, 'வயவலியாகும்' தொல்காப்பியம். ஆன் - எருமை; பசு. தளிர்ப்ப எனும் செயவெனெச்சம் எதிர்காலத்தில் வந்தது. தோழி தலைவியைத் தோழி என்றது 'அன்னை என்னை'- (தொல்காப்பியம் பொருள் - 242) என்பதால் அமைக்க. கடும் தேர் வரும் என்பதால் அதனில் தோன்றும் தலைவனின் உள்ளக்கிடக்கையை (ஆர்வத்தை) வெளிப்படுத்தியது

ஐம்பாற் கூந்தல்

தோழி தலைவியிடம், ''பொருள் தேடச் சென்ற நம் தலைவரை, காந்தள் மலர்களே அறிவிக்க, உடன் திரும்புவர்'' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்;
வணர்ஒலி ஐம்பாலாய்! வல்வருதல் கூறும்;
அணர்த்(து)எழு பாம்பின் தலைபோல் புணர்கோடல்
பூங்குலை ஈன்ற புறவு. **11**

ப-ரை: வணர் - நெளிவுடைய, ஒலி - தழைத்த, ஐம்பாலாய் - ஐவகை செயல்கொண்ட கூந்தலையுடையாய், புறவு - காட்டகத்து, அணர்த்து எழு - மேனோக்கி எழும், பாம்பின் தலைபோல் - பாம்பின்படத்தைப் போன்ற, புணர்கோடல் - இணைந்த காந்தள்கள், பூங்குலை ஈன்ற - பூங்கொத்துக்களை நல்க; புணர்தரு - பொருந்துதலையுடைய, செல்வம் - பொருளை, தருபாக்கு - கொண்டுவர, சென்றார் - சென்ற நம் தலைவர், வல்வருதல் - விரைந்து வர, கூறும் - அறிவிக்கும்.

க-ரை: காடுகளில் காந்தள் மலர்கள் பூத்திருப்பதால், அவை நம் காதலரை விரைவில் நம்மாட்டுச் செல்லுமாறு அறிவிக்கும்.

வணர் - வளைவு, நெளிவு, குழைவு முதலியன. ஒலி - தழைத்தல். ஐம்பால் - ஐந்துபிரிவுகளையுடையது; கூந்தல்: குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி என்பன. தருபாக்கு - வினை எச்சம். கோடல் - காந்தள். 'பூங்குலை'- 'பூப்பெயர் முன்னின மென்மையும் தோன்றும்'- (நன்னூல் - 200) என்பதால் பெற்றது.

நெய்யணி குஞ்சரம்

தலைவியைத் தோழி, "நாடோறும் மேகங்கள் தோன்றலாயின. கார்காலமென்பதை அறிவர் நம் தலைவர். ஆதலின் வருவது தவறாது," என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

மையெழில் உண்கண் மயில்அன்ன சாயலாய்!
ஐயந்தீர் காட்சி அவர்வருதல் திண்ணிதாம்;
நெய்யணி குஞ்சரம் போல இருங்கொண்மூ
வைகலும் ஏரும் வலம். **12**

ப-ரை: மை எழில்-கருமையும் அழகும் பொருந்திய, உண்கண் - கவர்ச்சியுடைய கண்களும், மயில் அன்ன சாயலாய் - மயில்போன்ற சாயலையும் உடையாய், நெய் அணி குஞ்சரம் - எண்ணெய் பூசப்பட்ட யானைகள் போல, இரும் கொண்மூ - கரிய மேகங்கள், வைகலும் - நாடோறும், வலம் ஏரும் - வல

மாக எழும்; (ஆதலால்) ஐயம் தீர் காட்சி - மயக்கம் தீர்ந்த அறிவினையுடைய, அவர் - நம் தலைவர், வருதல் - மீள வருதல், திண்ணிது - உண்மை.

க-ரை: மேகங்கள் நாடோறும் தோன்றும் கார்காலம் வந்து விட்டது. ஆதலின் அறிவுடைய நம் தலைவர் வருவது உண்மை.

காட்சி - அறிவு. உண்மையைத் 'திண்ணிது' என்றது, பொய்மை வன்மை இலாததால். திண்ணிதாம் - தாம் - அசை. ஏர் - எழுச்சி. இருமை - கருமை. 'நெய்யணி' ஈண்டு ஒளியைக் குறிக்க வந்தது. அடுக்கடுக்காக மேகங்கள் தோன்றலால் கார்காலத்தையும், சூரியனுக்கு வலப்பக்கமாக கார் (வடகிழக்கு பருவ) காலத்தில் மேகந் தோன்றலையும் வலம் என்பதால் குறித்தமை நோக்குக.

கண்கவர்ந்து மின்னும்

தோழி தலைவியிடம், "மேகம் மின்னலுங் பொழிதலும் செய்யலாயின். ஆதலின் தலைவர் வருவர்" என்று பருவங் காட்டி ஆற்றுவித்தாள்.

ஏந்(து)எழில் அல்குலாய்! ஏமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பின் பெயல்தாழ;—வேந்தர்
களி(று)எறி வாளரவம் போலக்கண் வெளவி
ஒளிறுபு மின்னும் மழை. 13

ப-ரை: எழில் - அழகினையுடைய, ஏந்து அல்குலாய் - நிமிர்ந்த அல்குலையுடையாய், ஏம் ஆர்ந்த காதலர் - இன்பம் துய்த்த மகளிரின், கூந்தல் - கூந்தலினது, வனப்பின் - அழகு போல, பெயல் - மழை, தாழ - பெய்ய; மழை - மேகம், வேந்தர் களிறு எறி - அரசர் யானையை வெட்டி வீழ்த்துகின்ற, வாள் - வாளும், அரவம் போல - ஒலியும்போல, கண் வெளவி - கண் ஒளிகெட, ஒளிறுபு-மின்னுதலைச் செய்யும் (ஆதலால் தலைவர் வருவர்).

க-ரை: கரிய கூந்தல்நிறம் போன்ற மேகங்கள் மழை பெய்யவும் மின்னுதலைச் செய்யவும் தோன்றி விட்டது. ஆதலின் நம் தலைவர் விரைவில் வருவர்.

ஏம் - ஏமம்; கடைக்குறை. காதலர் - மகளிர். வாளரவம்-உம்மைத் தொகை. வாள் - மின்னலுக்கும், அரவம் - இடிக்கும் உவமையாக வந்தன. ஒளிறுபு - செய்பு என்னும்

வாய்ப்பாட்டு வினை எச்சம். 'தலைவர் வருவர்' என்பது குறிப்பால் கூறியது.

மெல்ல நகும் மேகம்

தோழி தலைவியை நோக்கி, "முல்லை அரும்பிவிட்டது. வானமும் மின்னத் தொடங்கிவிட்டது. ஆதலின் நம் தலைவர் நம்மை நாடி விரைவில் வருதலை அறிவாயாக" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

செல்வம் தரல்வேண்டிச் சென்றநம் காதலர்,
வல்லே வருதல் தெளிந்தாம்;—வயங்(கு)இழாய்!
முல்லை இலங்(கு)எயி(று) ஈன; நறும்தண்கார்
மெல்ல இனிய நகும். 14

ப-ரை: வயங்கு இழாய் - விளங்குகின்ற அணிகலையுடையாய், முல்லை - முல்லைக் கொடிகள், இலங்கு - விளங்குகின்ற, எயிறு ஈன - (மகளிரின் பற்களைப் போன்ற) அரும்புகளைக் கொடுக்க, நறும் தண் கார் - நல்ல குளிர்ந்த மேகம், மெல்ல இனிய நகும் - மெல்ல இனியவாக மின்னும்; (ஆதலால்) செல்வம் – பொருளை, தரல் வேண்டி - தேடி அடைதலை விரும்பி, சென்ற - பிரிந்து சென்ற, நம் காதலர் - நமது தலைவர், வல்லே வருதல் - விரைந்து வருதலை, தெளிந்தாம் - அறிந்தோம்.

க-ரை: முல்லை அரும்புகளைத் தோன்றச் செய்ய, மேகங்கள் மின்னும் கார்காலமும் தோன்றிவிட்டது. ஆதலின் பொருள் தேடச் சென்ற நம் தலைவர் வருதலை அறிந்தோம்.

தெளிந்தாம் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை, நறு - நல்ல. எயிறு - அரும்புக்கு வடிவுவமை. வல்லே - ஏகாரம் அசை. மெல்ல இனிய நகும் - விட்டு விட்டு மின்னுதல். இது கார்காலத் தொடக்கத்தை உணர்த்திற்று. வயங்கிழாய் - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகை.

குழல் ஊதும் தும்பி

தோழி தலைவியிடம், "குருந்தமலர் உள்ளிருந்து வண்டு பாடவும், புறத்தே தும்பி குழல் இசைக்கவும் செய்யும் இக் காலத்தே, நம் தலைவர் நம்மைவிட்டுப் பிரிந்திருக்க விரும்பார். விரைவில் வருவர்" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

திருந்(து)இழாய்! காதலர் தீர்குவர் அல்லர்;
குருந்தின் குவிஇணர் உள்உறை ஆகத்
திருந்(து)இன் இளிவண்டு பாட, இரும்தும்பி
இன்குழல் ஊதும் பொழுது. 15

ப-ரை: திருந்து இழாய் - செப்பம் செய்யப்பட்ட அணிகளையுடையாய், குருந்த மரத்தின், குவி இணர் உள் - குவிந்த பூங்கொத்துக்களின் உள்ளிடமே, உறை ஆக - தங்குமிடமாக இருந்துகொண்டு, திருந்து இன் இளி - செப்பம் செய்யப்பட்ட இனிய பண்ணை, வண்டு பாட - வண்டுகள் பாடவும், இரும் தும்பி - (புறத்தேயுள்ள) கரிய தும்பிகள், இன் குழல் ஊதும் - இனிய குழல்போல் இசைக்கும், பொழுது - இதுபோது, காதலர் - நம் தலைவர், தீர்குவர் அல்லர் - நம்மை நீங்கியிருக்கமாட்டார்.

க-ரை: வண்டுகள் குருந்த மலர் உள்ளிருந்து பாடவும், தும்பிகள் புறத்தே இசைத்தலையும் பார்த்த நம் தலைவர், நம்மை நீங்கியிருக்க விரும்பமாட்டார். விரைவில் வருவர்.

திருந்திழாய் - வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. திருந்து - ஒழுங்கு; சீர். உறை - தொழிற்பெயர்; உறையும் இடத்திற்காயது. உள்ளுறை என்பதை உறையுள் என இலக்கணப் போலியாக்குக. இளி - பஞ்சம சுரம்; பண்.

குயிலும் மயிலும்

தோழி தலைவியிடம், "குயில் அகவலை ஒழித்தது; மயில் ஆடத் தொடங்கி விட்டது. வானமும் இடிமுழங்கலாயிற்று. பசலை மறைய முற்படுகிறது. நம் தலைவர் வந்திடுவார்" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

கருங்குயில் கைஅற, மாமயில் ஆலப்,
பெருங்கலி வானம் உரறும்;—பெருந்தோள்!
செயலை இளந்தளிர் அன்னநின் மேனிப்
பசலை பழங்கண் கொள, 16

ப-ரை: பெருந்தோள் - பெரிய தோள்களையுடையவளே, செயலை - அசோகினது, இளந்தளிர் - இளந் தளிரை, அன்ன - போன்ற, நின் மேனி - நினது உடம்பிலுள்ள. பசலை - பசலையானது, பழங்கண் - மெலிவு, கொள - கொள்ளவும், கருங்

குயில் - கரிய நிறமுள்ள குயில்கள், கையற - கூவாது துன்புறவும், மாமயில் - அழகிய மயில்கள், ஆல - ஆடவும், பெரும் கலி - பேர் ஒலியையுடைய, வானம் - மேகங்கள், உரறும் - முழங்குவதாகும்.

க-ரை: பசலே அழியவும், குயில் கூவாது வருந்தவும், மயில் ஆடவும், மேகங்கள் முழங்கவும், கார்காலம் தோன்றலாயிற்று. ஆதலின் நம் தலைவர் வருவர்.

கை அறல் - செயலற்ற நிலை. கார் காலத்தில் குயில் கூவாதிருத்தல் அதன் செயலற்ற துன்பத்தை வெளிப்படுத்துகிறது. மயில் ஆடி மகிழ்தல் அதன் இன்பத்தைப் புலப்படுத்துகிறது. ஆல - மயிலின் குரல்; ஆட.. பசலே - தேமல் ; பொன்னிறமாக உடலில் படர்தல். இது காதலர் பிரிவால் உளதாகும் நிறவேறுபாடு. பழங்கண் - மெலிவு (ஒரே சொல்)- 'பழங்கணும் புன்கணும் மெலிவின் பால' என்பது திவாகரம். 'பசலே பழங்கண் கொள' என்றதால், தலைவர் வருகை கேட்ட தலைவி மகிழ்ச்சியுற, அப் பசலே அழியலாயிற்றை உணர்த்திற்று. செயலே - அசோகமரம்.

பறையொலி மேகம்

தோழி தலைவியிடம், "பாம்பை வருத்தும் இடிமுழங்கவும், எங்கும் இருள் கவியவும் ஆயிற்று; நின் நெற்றியோ ஒளிபெறலாயிற்று; ஆதலின் தலைவர் வருவர்', என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

அறைக்கல் இறுவரைமேல் பாம்பு சவட்டிப்
பறைக்குரல் ஏறெுடு பெளவம் பருகி,
உறைத்(து)இருள் கூர்ந்(து)அன்று வானம் பிறைத்
கொண்டன்று பேதை நுதல். [தகை

ப-ரை: பேதை - பேதைத் தன்மையுடையவளே, வானம் - மேகமானது, பெளவம் பருகி - கடல் நீரைக்குடித்து, பறை குரல் - பறை யொலி போன்ற, ஏறெுடு - இடி முழக்காலே, பாம்பு - பாம்புகளை, சவட்டி - வருத்தி, அறைக்கல் - பாறைகளையுடைய, இறுவரை மேல் - பக்க மலேயின் மேல், உறைத்து - மழையைச் சொரிந்து, இருள் கூர்ந்து - இருள்மிக்கதாகியது; (ஆதலால்) நுதல் - நினது நெற்றி, பிறை தகை - பிறை மதியின் அழகான தன்மையை, கொண்டன்று - கொண்டது.

க-ரை: மேகம் கடல் நீரைப் பருகி, இடி முழக்கத்தால் பாம்புகளை வருத்தி, மலைகளில் மழையைப் பொழிந்து, எங்கும் இருள் சூழ்தலாயிற்று. ஆதலின் நம் தலைவர் வருவர் என்பதை முன்னறிந்தே நின் நெற்றி அழகுடையதாயிற்று.

இறுவரை - பக்கமலை. சவட்டி - வருத்தி. உறைத்து - சொரிதல். கூர்ந்தன்று - கூர் எனும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினை முற்று. 'பேதை நுதல் பிறைத் தகை கொண்டது' என்பதால் தலைவரின் வருகை உறுதியாயிற்று.

நல்கூர்ந்தார் மேனி

தோழி தலைவியிடம், "பொருள் தேடச் சென்ற நம் தலைவரை இடியுடன் மழை பொழிய, நல்கூர்ந்தார் மேனி போல பொலிவிழந்த காடுகளோ செல்வர் போல் பூத்து நிற்கும். ஆதலின் தங்கார். உடன் வருவர்" என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

கல்பயில் கானம் கடந்தார் வர,ஆங்கே
நல்லிசை ஏறொடு வானம் நடுநிற்பச்,
செல்வர் மனம்போல் கவின்ஈன்ற, நல்கூர்ந்தார்
மேனிபோல் புல்லென்ற காடு. 18

ப-ரை: கல்பயில் - கற்கள் நெருங்கிய, கானம் - காட்டை, கடந்தார் - கடந்து சென்ற நம் தலைவர், வர - வரும் வகையை, ஆங்கே - அப்பொழுதே, வானம் - மேகங்கள், நல் இசை - மிகுந்த ஒலியையுடைய, ஏறொடு - இடியுடனே, நடுநிற்ப - எங்கும் மழை பொழிதலால், நல்கூர்ந்தார் - வறுமையுற்றார், மேனிபோல - உடம்புபோல, புல் என்ற - பொலிவு இழந்த, காடு - காடுகள், செல்வர் - பொருட் செல்வம் உடையார், மனம் போல் - மகிழும் மனம்போல, கவின் - அழகை, ஈன்ற - கொடுத்தன.

க-ரை: பொருள் தேடச் சென்ற தலைவர், வினை முடித்து வருதலை, ஆங்கே இடியொடு மழை பொழிதலால், பொலிவிழந்த காடுகள் பூத்து அறிவித்தன.

நல் - மிக்க; 'நன்றி - பெரிதாகும்' என்பது தொல்காப்பியம். பொலிவிழந்த காடுகள் காலம் வந்தவுடன் அழகு பெற்றதைப் போல, பொலிவிழந்த தலைவி தலைவன் வருவதைக் கார்கால வாயிலாக அறியவே அழகுறலானுள் என்பதை, 'நல்கூர்ந்தார் மேனிபோற் புல்லென்ற காடு செல்வர் மனம்போல் கவின் ஈன்ற" என்ற அடிகள் குறிக்கின்றது.

நெடுவழி சென்ற நெஞ்சு

தலைமகன், "வெண் கடம்பு பூத்தன. தலைவி தனித்து வருந்தலை அகற்றித் துணையாகச் செல்லத் துடிக்கின்றது என்மனம். புறப்படுவோம்" என்று பாகனிடம் கூறினான்.

நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினைச்
செங்கால் மராஅம் தகைந்தன; — பைங்கோல்
தொடிபொலி முன்கையாள் தோள்துணையா வேண்டி
நெடுஇடைச் சென்ற(து);என் நெஞ்சு. 19

ப-ரை: நாஞ்சில் - கலப்பையையுடைய, வலவன் - வெற்றியையுடையோனாகிய பலராமனது, நிறம் போல — வெண்மை நிறம்போல, பூ சினை - பூங்கொம்பினையும், செங்கால் - சிவந்த தாளினையுமுடைய, மராஅம் - வெண்கடம்புகள், தகைந்தன - மலர்ந்தன; (ஆதலால்) என் நெஞ்சு - என் மனம், பைங் கோல் - பசுமையாகத் திரண்ட, தொடி - வளைகள், பொலி - விளங்குகின்ற, முன் கையாள் - முன்கையையுடையாளின், தோள் - தோள்கள், துணையா வேண்டி - எனக்குத் துணையாக வேண்டி, நெடு இடை - (அந்த) நீண்ட தூரத்தை, சென்றது - கடந்து சென்றது.

க-ரை: வெண்கடம்பு மலர்ந்தன. என் நெஞ்சம் இக் காட்டையும் கடந்து நம் தலைவியின் துணை வேண்டிச் சென்றது. ஆதலின் நாம் செல்லவேண்டும்.

நாஞ்சில் வலவன் - பலராமன். மராஅம் – வெண் கடம்பு. தகைதல் - மலர்தல். தோள் துணையா - தோள் துணையாக; கடைக்குறை.

செருமன்னர் சேனை

தலைவன், "வேந்தனிட்ட வினையும் முடிந்தது. வழிகளும் இனிதாயின. மேகங்களும் செருமன்னர் சேனைபோல அணி அணியாய் வானத்தில் செல்லத் தொடங்கி விட்டன. ஆதலின் செல்வோம்" என்று பாகனிடம் கூறினான்.

வீறுசால் வேந்தன் வினையும் முடிந்தன;
ஆறும் பதமினிய ஆயின; — ஏறு(டு)
அருமணி நாகம் அனுங்கச் செருமன்னர்
சேனைபோல் செல்லும், மழை. 20

ப-ரை: விறுசால் - வெற்றி மிகுந்த, வேந்தன் - அரசனுடைய, வினையும் - போர்த் தொழில்களும், முடிந்தன - முடிவடைந்தன; ஆறும் - வழிகளும், பதம் இனிய ஆயின – (இடரின்றி) ஒழுங்கொடு இனிமையதாயின; மழை - மேகங்கள், அருமணி - கரியமணியையுடைய, நாகம் - பாம்புகள், அனுங்க - வருந்த, ஏறெுடு - இடியுடனே, செரு மன்னர் - போர் புரியும் அரசரின், சேனைபோல - (அணி வகுத்த) சேனையைப்போல, செல்லும் - (அணி அணியாகச்) செல்லும்.

க-ரை: அரசனின் கட்டளையும் முடிவுற்றன. வழிகளும் இனிதாயின. பாம்புகள் வருந்த இடியொடு மேகங்கள் முழங்கலாயின. காலம் கார் காலம். நாம் செல்வோம்.

பதம் - செவ்வி; சமயம். அனுங்க - வருந்த. பாம்பு இடியோசைக்கு வருந்தும் என்பது 'முதிர்மணி நாகம் அனுங்க முழங்கி' (38) திணை மொழி ஐம்பதால் விளங்கும். 'செருமன்னர் சேனைபோல் மழை செல்லும்' — படைகள் போரில் அணி அணியாய்ச்செல்லல், பறை முழக்கல், அம்பு சொரிதல் போல் மேகக் கூட்டங்கள், இடி முழக்கம், மழை சொரிதல் முதலிய செயலை உவமை விளக்குகிறது.

முள் எயிறு

தலைவன், "தேர் வந்த வழியெலாம் முல்லை மலர்ந்து நின்ற காட்சி, நம் தலைவியின் பற்களை நினைவுறுத்தின. இனி நீடித்தல் தகா. புறப்படுவோம்" என்று பாகனிடம் கூறினான்.

பொறிமாண் புனை திண்தேர் போந்த வழியே.
சிறுமுல்லைப் போதெல்லாம் செவ்வி, — நறுநுதல்
செல்வ மழைத்தடங்கண் சின்மொழிப் பேதைவாய்
முள்எயி(று) ஏய்ப்ப வடிந்து. **21**

ப-ரை: பொறி - எந்திரங்கள், மாண் - சிறந்து, புனை - அலங்கரிக்கப்பட்ட, திண்தேர் - வலிமையுடையதேர், போந்த வழியே - சென்ற வழியினிலே, சிறு முல்லை போது - சிறிய அரும்புகளையுடைய முல்லை மலர்கள், எல்லாம் - யாவும், செவ்வி - அழகுமிகுந்த; நறுநுதல் - நல்ல நெற்றியையும், செல்வ - வளப்பமான, மழை - மழைபோல் குளிர்ந்த, தடம் கண் - அகன்ற கண்களையும், சில் மொழி - மென்மையான மொழியினையுமுடைய, பேதை வாய் - பேதைத்தன்மையுடையாளது வாயின்கண் உள்ள, முள் எயிறு - கூர்மையான பற்களை, வடிந்து - வடித்தெடுத்ததை, ஏய்க்கும் — ஒக்கும்.

க-ரை: தேர் சென்ற வழியெலாம் முல்லையரும்புகள் மலர்ந்து நம் தலைவியின் பற்களின் வடிவை நினைவுறுத் தின. ஆதலின் நாம் செல்வோம்.

போது - மலர்; பொழுதைக் காட்டலால் இப் பெயர் பெற்றது; காரணப் பெயர். சின் மொழி - மென்மையான மொழி. வடிந்து - வடித்து; உருஒத்தல். செல்வம் - வளப்பம்.

வளமுடையார் செல்வம்

தலைவன், 'பணியாளரும் பருவ உடை உடுத்தலாயினர். காடுகள் தளிர்த்துப் பூத்துப் பொலிவுற்றன. ஆதலின் தேரைப் பூட்டி வா. செல்வோம்' என்று பாகனிடம் கூறி ஞன்.

இளையரும் ஈர்ங்கட்(டு) அயர, உளை அணிந்து
புல்உண் கலிமாவும் பூட்டிய; — நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போல் பூத்தன காடு. *22*

ப-ரை: இளையரும் - சேவகரும், ஈர்ங்கட்டு - குளிர்காலத் திற்குரிய உடையினை, அயர - உடுக்க; உளை - குதிரையின் தலை அணியாகிய தலையாட்டத்தை, அணிந்து - அணிந்து, புல் உண் - புல்லை உண்கின்ற, கலிமாவும் - கனையொலி செய்யும் குதிரையை, பூட்டிய - தேரில் பூட்டி (வருவாய்); காடு - காடுகள் நல்லார் - நற்குண மகளிரின், இளநலம் போல் - இளமை அழகு போல, கவினி - அழகுற்று, வளம் உடையார் - வருவாயை உடையாரது, ஆக்கம் போல் - செல்வம்போல, பூத்தன - மலர்ந்தன.

க-ரை: சேவகர்கள் குளிர்கால உடை உடுத்தனர். குதிரைகள் தேரில் பூட்டப் பெறவே, பெண்களின் இளமை அழகு போலவும், வருவாய் உடையார் செல்வம் போலவும் பூக்கள் காடுகளில் மலர்ந்தன.

இளையர் - சேவகர்; பணியாளர்; ஏவலாளர்; 'யான் கண்டனையர் என் இளையரும்' என்ற புறநானூற்றின் அடி களை நோக்குக. ஈர்ங்கட்டு - குளிர்கால ஆடை. உளை - தலையாட்ட மென்னும் ஒரு அணி. இது குதிரையின் தலை யிடத்து அணியப்படுவது. பூட்டிய - செய்யிய என்னும் வாய்ப்பாட்டு வினையெச்சம். நலம் - வடிவு. வளம் - வரு வாய். 'வளத்தக்காள் வாழ்க்கைத் துணை' (குறள் - 51)

எனும் பரிமேலழகர் உரை நோக்குக. பூத்தல் - மலர்தல்; பொலிதல்.

ஆலிபுரளும் அரிய மழை

தோழி தலைவியிடம், ''மழை, துளிகளையும் ஆலங்கட்டிகளையும் சிந்தலாயிற்று. ஆதலால் தலைவர் வாரார் என்று ஊடல் வேண்டாம். வருவர்'' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

கண் திறள் முத்தம் கடுப்பப், புறவெல்லாம்
தண் துளி ஆலி புரளப், புயல்கான்று
கொண்(டு)எழில் வானமும் கொண்டன்(று) எவன்
ஒண்தொடி ஊடு நிலை. [கொலோ?

ப-ரை: ஒண்தொடி - ஒளிபொருந்திய வளைகளை அணிந்தவளே, புறவு எல்லாம் - காடுகள் யாவும், கண்திறள் - வடிவு திரண்ட, முத்தம் கடுப்ப - முத்தை ஒப்ப, தண் துளி - குளிர்ந்த நீர்த் துளிகளும், ஆலி - ஆலங்கட்டிகளும், புரள - சிதறிக் கிடக்கும்படி, புயல் - மேகம், கான்று - பொழிந்து, கொண்டு - கொண்டு, எழில் - அழகுடைய, வானமும் - ஆகாயம் முழுவதும், கொண்டு அன்று - கொண்டது; (ஆதலால்) ஊடுநிலை - பிணங்குந் தன்மை, எவன்கொல் - எதற்கு? (வேண்டாம்).

க-ரை: காடுகள் எங்கும் மழைத் துளியும் ஆலங்கட்டிகளும் சிதறிக் கிடக்கின்றன. ஆதலால் நம் தலைவர் விரைவில் வருவர். பிணக்கம் வேண்டாம்.

கண் திரள் முத்தம்-முத்து உருண்டு திரண்டுள்ளதைக் குறிக்கிறது. கொல், ஓ - அசைகள். கடுப்ப - உவம உருபு. எவன்-வினா. தலைவர் வருவர்-என்பது குறிப்பால் பெற்றது.

மதநீர் மணம்

தலைமகன், 'மதநீர் மணம் வீசுகிறது. மழையும் தூறுகின்றது. கூறிவந்த சொல்லுக்குக் குறை வரலாகாது. வந்த வேலையும் முடிந்தது. காணச் செல்' என்று தன் மனதிடம் கூறினான்.

எல்லா வினையும் கிடப்ப, எழுநெஞ்சே!
கல்லோங்கு கானம் களிற்றின் மதநாறும்;
பல்இரும் கூந்தல் பணிநோனாள் கார்வானம்
மெல்லவும் தோன்றும், பெயல். 24

ப-ரை: கல் - மலை, ஓங்கு - உயர்ந்த, கானம் - காடுக ளில், களிற்றின் மதம் நாறும் - யானையின் மதநீர் மணம் வீசும்; கார் வானம் - கரிய மேகத்தினிடத்து, பெயல் - மழை, மெல்லவும் தோன்றும் - மென்மையாக (தூறல்) வீழும்; (ஆத லால்) பல் இரும் கூந்தல் - அடர்ந்த கரிய கூந்தலையுடையவள், பணி - நாம் ஆற்றுமாறு கூறிப் பணித்த சொல்லை, நோனுள் - இனிப் பொறுக்கமாட்டாள், நெஞ்சே - மனமே, எல்லா வினை யும் - எல்லாத் தொழில்களும், கிடப்ப - முற்றுப் பெற்று நிற்க, எழு - இனி நீ (தலைவியைக் காண) செல்வதற்கு எழுவாயாக.

க-ரை: காடெல்லாம் மதமணம் நாறலாயிற்று. மழை யும் தூறலாயிற்று, இனியும் தாமதித்தல் அழகல்ல. கூறி வந்த சொல்லை இனிப் பொறுக்க மாட்டாள். வந்த வினையும் முடிவுற்றன. மனமே காணப் புறப்படு.

கிடப்ப - வியங்கோள் வினைமுற்று. பல் இரும் கூந்தல் - பல் என்பது அடர்ந்த எனும் பொருளையும், இரும் என்பது கடுமையையும் உணர்த்திற்று. 'களிற்றின் மதம் நாறும்' என்பது, கார்காலத்தில் களிறுபிடியுடன் இயைந்தாடுதலால் மதம் மிகுந்து ஒழுகும். அம்மணம் காடெங்கும் பரந்து வீசுமாம்.

வாரார் என்று வந்த பசலை

தோழி, தெறுழ் மலர்கள் மலர்ந்தன. தலைவர் அறி வித்த காலமும் வந்து விட்டது. பசலையோ தலைவிக்கு மிக்கு விட்டது. இனி என் கூறி ஆற்றுவன்' என்று தன் ஆற்றுமையை உரைத்தாள்.

கருங்கால் வரகின் பொரிப்போல் அரும்(பு)அவிழ்ந்(து)
ஈர்ந்தண் புறவில் தெறுழ்வீ மலர்ந்தன;
சேர்ந்தன செய்குறி; வாரார் அவரென்று
கூர்ந்த; பசலை அவட்கு. 25

ப-ரை: ஈர்ந்தண் - குளிர்ச்சி மிக்க, புறவில் - காட்டில், கரும் கால் வரகின் - கரிய தாளினையுடைய வரகினது, பொரி போல் - பொரியைப் போல, தெறுழ் - தெறுழினது, வீ - மலர்கள், அரும்பு அவிழ்ந்து மலர்ந்தன - அரும்புகள் முகை உடைந்து மலர்ந்தன; செய்குறி - (தலைவரால்) செய்த குறிகள், சேர்ந்தன - வந்துவிட்டன; (ஆதலால்) அவர் வாரார் என்று - நம் தலைவர் இனி வரமாட்டாரென்று, அவட்கு - தலைவிக்கு, கூர்ந்த - (பசலை) மிக்கது.

க-ரை: தெறுழங்கொடிகள் பூத்துவிட்டன. அவர் செய்த குறிகளும் வந்துவிட்டன. அவர் இனி வாரார் என்று தலைவியிடம் பசலையும் மிகப் பற்றிவிட்டது.

ஈர்ந்தண் - ஈர் + தண்; ஒருபொருட் பன்மொழி. தெறுழ் - ஒருகொடி. கூர்ந்த - கூர்ந்தது என்பதின் ஈறு கெட்டது. கார்காலம் தொடங்கியும் வாராததினால் பசலை மிக்கது. இதுவரை ஆற்றுவித்தோம், இனி என் செய்வோம் எனும்பொருள்பட 'அவர் வாரார்' என்பது நின்றது.

கார்த்திகை விளக்கு

தோழி தலைமகளிடம், 'காடெல்லாம் கார்த்திகை விளக்குப்போல தோன்றிகள் பூத்தன. மழையும் தலைவரிட்ட தூதுபோல தொடங்கலாயிற்று. அவர் விரைவில் வருவர்'' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்,
புலமெலாம் பூத்தன தோன்றி; சிலமொழி!
தூதொடு வந்த மழை. 26

ப-ரை: சிலமொழி - மென்மையான மொழிகளையுடையாய், தோன்றி - தோன்றிப் பூக்கள், நலம் மிகு - நன்மை மிக்க, கார்த்திகை - கார்த்திகைத் திருவிழாவில், நாட்டவர் - நாட்டில் உள்ளோர், இட்ட - கொளுத்திவைத்த, தலைநாள் - முதல் நாள், விளக்கின் - விளக்கைப்போல, தகை உடைய வாகி - அழகுடையனவாகி, புலம் எலாம் - திசை எல்லாம், பூத்தன - மலர்ந்தன; மழை - மழையும், தூதொடு - (மின்னல், இடி முதலிய) தூதுடனே, வந்த - வந்தது.

க-ரை: தோன்றிப் பூக்கள் கார்த்திகை விளக்குப்போல பூத்து அழகு செய்கின்றன. மழையும் பொழியலாயிற்று. ஆதலின் தலைவர் வருவர்.

கார்த்திகைநாளில் நிரைநிரையாக விளக்கிடுதல் பண்டு தொட்ட வழக்கம். தலைநாள் - முதல் நாள். இது முன் கார்த்திகை முதல் நாள் எண்ணப்பட்டதை உணர்த்துகிறது. 'நலமிகு கார்த்திகை' என்பது கார்த்திகைத் திங்களைக்குறித்தது. 'நலமிகு கார்த்திகை முதல்நாள்' என்பது, கார்த்திகைத் திங்களில் அத் திங்களுக்குரிய சிறந்த நாளாகிய கார்த்திகையைக் குறிக்க வந்ததென்க. வந்த - வந்தது என்பதில் உள்ள ஈறு கெட்டது.

பள்ளியுள் கிடத்திடும் பசலே

தோழி தலைவியை நோக்கி, 'பிரிவின் தன்மையை நினைத்தோமானால் பசலையே நம்மைப் படுக்கையில் கிடத்திடும். குருக்கத்தி தழைத்து விட்டன. ஆதலின் வருவர்' என்று பருவங்காட்டி ஆற்றுவித்தாள்.

முரு(கு)இயம்போல் வானம் முழங்கி இரங்கக்
குரு(கு)இலை பூத்தன கானம்; - பிரி(வு)எண்ணி
உள்ளா(து) அகன்றார்;என்(று) ஊடியாம் பாராட்டப்
பள்ளியுள் பாயும் பசப்பு. 27

ப-ரை: வானம் - மேகமானது, முருகு இயம்போல் - குறிஞ்சிப் பறை போல், முழங்கி இரங்க - இடி முழங்குதலைச் செய்ய, கானம் - காட்டின்கண், குருகு இலை - குருக்கத்தியிலை, பூத்தன - தழைத்தன; பிரிவு - பிரிதலை, எண்ணி - (நம் தலைவர் நன்றென்று) நினைத்து, உள்ளாது - (நம் வருத்தத்தை) நினையாமல், அகன்றார் என்று - சென்றார் என்று, ஊடு யாம் பாராட்ட - நாம் ஊடுதலைப் பாராட்டுவதால், பசப்பு - பசலை நோய், பள்ளியுள் - படுக்கையுள், பாயும் - பரவும்.

க-ரை: இடி முழங்கவும், குருக்கத்தி தழைக்கவும் ஆயின. பிரிதலைத் துன்பமென நினையாமல் சென்ற தலைவர்மேல் பிணக்குறுவோமானால், பசலை படுக்கையிடத்து கிடக்கச் செய்யும்.

முருகு இயம் - துடி. முழங்கி இரங்க - ஒரு பொருட்பன்மொழி. இலை பூத்தல் என்பது இலை தழைத்தலைக் குறித்தது. ஊடியாம் - ஊடு + யாம், இகரம் குற்றியலிகரம். ஊடு - தொழிற் பெயர். 'பள்ளியுள் பாயும்' என்பது துன்ப மிகுதியினால் படுக்கையில் கிடக்கச் செய்யும் என்பதை உணர்த்திற்று.

பொன் குழை

தலைவன் தன் நெஞ்சை நோக்கி, 'அலர் எழா முன் நாம் செல்ல வேண்டும். வானமும் இடிக்க, குமிழும் பூத்தன' என்று கூறினன்.

இமிழ்இசை வானம் முழங்கக், குமிழின் பூப்
பொன்செய் குழையின் துணர்தூங்கத், தண்பதம்
செவ்வி உடைய சுரநெஞ்சே! காதலிஊர்
கவ்வை அழுங்கச் செலற்கு. 28

ப-ரை: இமிழ் இசை - முழங்கும் ஒளியையுடைய, வானம் - மேகமானது, முழங்க - இடி முழக்கத்தைச் செய்ய,

குமிழின் பூ - குமிழம் பூக்கள், பொன் - பொன்னுல், செய் - செய்யப்பட்ட, குழையின் - குழைபோல், துணர் - பூங்கொத்து கள், தூங்க - தொங்கின; நெஞ்சே - மனமே, காதலி ஊர் - நம் காதலியினது ஊருக்கு, கவ்வை - அலர், அழுங்க - கெட, செலற்கு - நாம் செல்லுவதற்கு, சுரம் - காடுகள், தண்பதம் - தக்க, செவ்வி உடைய - சமயமும் உடையவாயின.

க-ரை: மேகம் இடி முழக்கமிடவும், குமிழின் பூக்கள் தொங்கவும், நெஞ்சமே நம் காதலியின் ஊரில் உண்டான அலர் கெட நாம் செல்ல நல்ல சமயமும் ஆயின.

குமிழ் - இப் பூவை மூக்கிற்கு உவமையாக்குவர். நிறம், கொத்தாகத் தொங்கல் முதலியவை நோக்கிக்குழைக்கு உவமையாக்கினர். சுரம் - காடு. கவ்வை - அலர்; ஊரார் கூறும் பழிமொழி. மணம் புரிந்து வாழ்வேன் என்பதை 'கவ்வை அழுங்க' என்ருர். தண்பதம் - தக்க.

பகை மேகம்

தலைவன் தன் நெஞ்சை நோக்கி, "சோலைகள் மலர்ந்து, வண்டுகள் பாடலாயிற்று. மேகங்கள் நெருங்கி போர்புரிவன போன்று நிற்கின்றன. வினையும் முடிந்தது. செல்லும் வழியும் செம்மையுடையன. புறப்படுவோம்' என்று கூறினன்.

பொங்கரும் ஞாங்கர் மலர்ந்தன; தங்காத்
தகைவண்டு பாண்முரலும் கானம்;—பகைகொண்டல்
எவ்வெத் திசைகளும் வந்தன்று; சேறும்நாம்
செவ்வி உடைய சுரம். 29

ப-ரை: பொங்கரும் - சோலைகளின், ஞாங்கர் - பக்கமெல்லாம், மலர்ந்தன - பூக்கள் பூத்தன; கானம் - காட்டின் கண்ணே, தங்கா - தங்காது திரியும், தகை வண்டு - அழகுடைய வண்டுகள், பண் - பாட்டை, முரலும் - பாடுகின்றன; பகை - மாறுபாடுபோல் (நெருங்கிய), கொண்டல் - மேகங்கள், எ திசைக்கும் - எல்லாத் திசைகளிடத்தும், வந்தன்று - வந்தது; சுரம் - அரிய வழிகளும், செவ்வி உடைய - ஒழுங்குடையன ஆயின; (ஆதலால்) நாம் சேறும் - நாம் செல்லக்கடவேம்.

க-ரை: சோலைகள் எல்லாம் பூத்தன. வண்டுகள் பாடலாயின. மேகங்கள் எங்கும் எழுந்தன. வழியும் நேர்மையாயின. நாம் செல்வோம்.

பொங்கர் - இலவு; சோலை. சேறும் - செல்வோம் என்றது நெஞ்சை உளப் படுத்திப் பாகர்க்குக் கூறியதாகும். பகை கொண்டல் - வினைத்தொகை; ஈண்டு மாறுபட்டார் எழுவதுபோன்று நெருங்கியிருக்கும் கூட்டமான மேகங்களைக் குறிப்பிட்டது.

ஊதை உளரும்

தலைவன், 'மழை பொழிந்து, எழும் ஊதைக் காற்று, நம் காதலியது அறியாமையைத் தெரிவித்து, சோலையை விட்டு நீங்காதிருக்கிறது. ஆதலின் செல்வோம்' என்று தன் நெஞ்சை நோக்கிக் கூறினான்.

வரைமல்க, வானம் சிறப்ப, உறைபோழ்ந்(து)
இருநிலம் தீப்பெயல் தாழ, — விரைநாற,
ஊதை உளரும்; நறும்தண்கா பேதை
பெருமட நம்மாட்(டு) உரைத்து. 30

ப-ரை: வரைமல்க - மலைகள் வளம் நிறைய, வானம் சிறப்ப - வானிடம் சிறப்படைய, இருநிலம் - பெரிய பூமியை, உறை - நீர்த்துளிகளால், போழ்ந்து - ஊடறுத்து, தீம் பெயல் - இனிய மழை, தாழ - பொழிய, விரை நாற - நறுமணம் கமழ, ஊதை - குளிர்காற்று, பேதை - காதலியது, பெருமடம் - அறியாமையை, நம் மாட்டு உரைத்து - நமக்குத் தெரிவித்து; நறும் தண் கா - மணமுடைய குளிர்ந்த சோலையில், உளரும் - அசையாதிருக்கும் (ஆதலின் செல்வோம்).

க-ரை: மலைவளம் சிறக்க மழை பொழிய, குளிர் காற்று நம் காதலியது அறியாமையைத் தெரிவித்து நிற்கிறது. ஆதலின் செல்வோம்.

உறை - நீர்த்துளி. போழ்ந்து - ஊடறுத்து; ஒருநீர் ஒழுக்கு மற்றொரு நீரொழுக்கின் இடையிடை வீழ்ந்து வருதல். ஊதை - குளிர்காற்று. உளர்தல் - அசைதல். 'பேதை பெருமடம்' என்பது தலைவர் வாராரென்று நினைத்து வருந்தும் தலைவியது அறியாமையைக் குறித்தது. வரையும் வானமும் சிறக்க பூமியில் மழை பெய்தல் இன்றியமையாத் தன்மை என்பதை, 'வரைமல்க.........பெயல் தாழ' குறித்து நின்றது அறியத்தக்கது.

எழில் எருமை

தலைமகன் பாகனை நோக்கி, 'உயர்ந்த கரையையுடைய குளத்தில் எருமைக் கடாக்கள், ஆங்குள்ள பூங்கொடிகளைக்

கொம்புகளில் சூடிக் கொண்டு, மள்ளரைப்போல் இறுமாந்து நீந்தும். இக் கார்காலமே நாம் தலைவிக்கு வருவதாகக் கூறினேம். ஆதலின் தேரை விரைவினில் ஓட்டுவாயாக' என்றான்.

கார்ச்சேண் இகந்த கரைமருங்கின் நீர்ச்சேர்ந்(து),
எருமை எழில்ஏ(று) எறிபவர் சூடிச்,
செருமிகு மள்ளரில் செம்மாக்கும் செவ்வி,
திருநுதற் கியாம்செய் குறி. 31

ப-ரை: கார் - மேகம், சேண் இகந்த - தூரமும் உயரமும் கொண்ட, மருங்கின் - அவ்வெல்லையின் பக்கத்திலுள்ள, நீர் சேர்ந்து - நீரையுடைய குளத்தையடைந்து, எருமை எழில் ஏறு - எருமையில் அழகுடைய ஆண் எருமை, எறி - எறியப்பட்ட, பவர் - பூங்கொடிகளை, சூடி - சூடிக்கொண்டு, செருமிகு - மறமிக்க, மள்ளரில் - மள்ளரைப்போல, செம்மாக்கும் - (மகிழ்ச்சியால்) இறுமாந்திருக்கும், செவ்வி - காலமாகிய கார்காலமே, திருநுதற்கு - அழகிய நெற்றியையுடையாளுக்கு, யாம் - நாம், செய்குறி - (மீள்வதற்குச்) செய்த குறியாகும். (ஆதலால் தேரினை விரைந்து செலுத்துவாயாக).

க-ரை: எருமைகள் குளங்களில் இறங்கி ஆங்குள்ள பூங்கொடிகளைக் கொம்புகளில் சூடிக்கொண்டு, தருக்கித் திரியும் காலமே நாம் மீண்டு வருவதாகக் கூறினது. இதுவே நாம் செய்த குறியுமாகும். இனித் தாமதித்தல் அழகல்ல தேரைச் செலுத்துவாயாக.

சேண் - தூரம்; தொலைவு. மள்ளர் - கடாவுக்கு உவமையாதல் 'மள்ளரன்ன தடங்கோட்டெருமை' என்னும் ஐங்குறு நூறால் அறிக. பவர் - ஒருவகைப் பூங்கொடி. 'திருநுதற் கியாம்' குற்றியலிகரம் அலகு பெறுதாயிற்று. எறியப்பட்ட - குளத்தில் அங்கும் இங்குமாக இருப்பது வீசி எறியப்பட்டதை ஒத்திருந்ததைக் குறித்தது.

பாணரும் வண்டும்

தலைவன் பாகனைப்பார்த்து, 'செல்வரிடம் பரிசில்பெறும் பாணர் போல பிடவத்திடம் வண்டுகள் பாடித்தேனைப் பெறுவதைப் பார். மேகங்கள் ஓடுகின்றன. நாம் இனி இருத்தல் அழகல்ல. தேரைச் செலுத்துக' என்று கூறினன்.

கடாஅவுக பாக!தேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்
படாஅ மகிழ்வண்டு பாண்முரலும்; கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு. 32

ப-ரை: கெடாப் புகழ் - அழியாத புகழை, வேட்கை - விரும்புகின்ற, செல்வர் மனம் போல் - செல்வரது மனத்தைப் போல, படா - கெடுதல் இல்லாத, மகிழ் வண்டு - மகிழ்ச்சியையுடைய வண்டுகள், கானம் - காட்டிடத்து, பிடா - பிடவம் எனும், பெருந்தகை - பெருந்தகையானிடத்து, நன்கு - நன்ருக. பாண் - பாட்டினை, முரலும் - பாடும், பாக - பாகனே, கார் ஓடக் கண்டு - மேகம் ஓடுதலைப் பார்த்து, (ஆதலின்) தேர் - தேரைக், கடாவுக - விரைவாகச் செலுத்துவாயாக.

க-ரை: வண்டுகள் பிடவத்திடம் பாடவும், கார் ஓடுதலைப் பார்த்தும், இனியும் இருத்தல் அழகல்ல. விரைவில் தேரைச் செலுத்துக.

பிடவம் - ஒருவகைச் செடி. வண்டு பாடுதலை - வள்ளலிடம் பாணர் பாடிப் பரிசில் பெறுதல் போல் பிடவத்திடம் வண்டுகள் தேன் கருதி பாடின எனும் தற்குறிப்பேற்றம் அறிந்து இன்புறத் தக்கது. நற்கு - நன்கு என்பதன் வலித்தல் விகாரம். இப் பாட்டின் நான்கடியினும் முதற்சீர் அளபெடுத்தமை அடி அளபெடையாகும். காண என்பது கண்டு என்ருயது வழுவமைதி.

மலைமேல் மழை

தலைவன் பாகனைப் பார்த்து 'மழை பொழியும் கார் காலமே நாம் வருவதாக அறிவித்த குறியாகும். ஆதலின் தேரை விரைவில் செலுத்தல் நன்று' என்று கூறினன்.

கடல்நீர் முகந்த கமஞ்சூல் எழிலி
குடமலை ஆகத்துக் கொள்அப்(பு) இறைக்கும்
இடமென, ஆங்கே குறிசெய்தேம்; பேதை
மடமொழி எவ்வம் கெட. *33*

ப-ரை: கடல் நீர் முகந்த - கடலினது நீரை முகந்த, கமம் - நிறைந்த, சூல் - கருப்பத்தையுடைய, மேகம் - மேகமானது, குடமலை ஆகத்து - மேற்கு மலையிடத்து, கொள் - தான் கொண்ட, அப்பு - நீரினை, இறைக்கும் - சொரியும், இடம் என - காலமென்று, ஆங்கே - அப்பொழுதே, பேதை - பேதையாகிய, மடமொழி - மடப்பத்தினையுடைய மொழியையுடையாளது, எவ்வம் கெட - வருத்தம் நீங்க, குறி செய்தேம் - (மீளுங்காலத்தை அறிவித்தற்குக்) குறி செய்தேம் (ஆதலின், தேரினை விரைவிற் செலுத்துவாயாம்).

க-ரை: மேகம் மேற்கு மலையிடத்து மழை பொழியும் கார்காலமே நாம் தலைவிக்கு வருவதாகக் குறி செய்தோம். ஆதலின் தேரைச் செலுத்து.

ஆகம் - அகம் என்பதன் நீட்டல் விகாரம்., இடம், ஆங்கு - என்பன காலத்தை உணர்த்தின. மடமொழி - அன்மொழித்தொகை. 'கொள் அப்பு இறைக்கும்' என்பதை 'கொள்ளப் பிறக்கும்' எனப் பாடங்கொள்ளின் மழை சொரியத் தோன்றும் எனவும் உரைக்க.

பெருவிறல் வானம்

தோழி, "கார்காலத்தில் வந்துவிடுவதாகக் கூறிச் சென்ற தலைவர், இன்னும் வராதது ஏனோ? தலைவியை எவ்விதம் ஆற்றுவன்," என்று தனது ஆற்ருமையை உரைத்தாள்.

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்,
பெருவிறல் வானம் பெருவரை சேரும்,
கருஅணி காலம் குறித்தார்; திருஅணிந்த
ஒள்நுதல் மாதர் திறத்து. *34*

ப-ரை: பெருவிறல் - மிக்க பெருமையையுடைய, வானம் - மேகமானது, விரிதிரை - விரிந்த அலைகளையுடைய, வெள்ளம் - கடலினது நீரை, வெறுப்பப் பருகி - வெறுக்கும் படி நிறைய உண்டு, பெருவரை - பெரிய மலையை, சேரும் - அடையும், கரு அணி காலம் - கார் காலமே, திரு அணிந்த - உத்தி எனும் அணியை அணிந்த, ஒள் நுதல் - ஒளி பொருந்திய நெற்றியையுடைய, மாதர் திறத்து - காதலியிடத்து, குறித்தார் - (தாம் மீண்டு வருதலைக்) குறிப்பிட்டார்.

க-ரை: மேகமானது கடல்நீரை உண்டு, மலையிடத்தைச் சேரும் கார்காலமே நம்தலைவிக்குக் குறி செய்த காலமாகும்.

வெறுத்தல் - நிறைதல்; வேண்டும் வேண்டாமென்ற அளவு. கரு அணி காலம் - கார்காலம். திரு அணி - தாமரைப் பூப்போல் தலையில் அணியும் ஒருவகை அணி. இதனை உச்சிப்பூ என்பர். உத்தி என்று திருமுருகாற்றுப் படை "தெய்வ உத்தியொடு வலம்புரி வயின் வைத்து' (23-அடி) என்று கூறும். 'பெருவிறல் வானம்' - கெடுப்பதும் எடுப்பதும் பெற்றமையைக் கருதி என்க.

மழை இரங்கும் மாண்பு

தோழி, 'தலைவர் பிரிவால் தலைவி பசலை மிகலானாள். வானமும் இவளுக்காக இரங்கி மழை தொடங்கி கார்காலத்தை அறிவித்தது. இதை இன்னும் தலைவர் அறிந்து வாராதிருக்கிறார். யாது கூறி ஆற்றுவன்,' என்று தன் ஆற்றாமை தோன்றக் கூறினாள்.

சென்றநம் காதலர் சேண்இகந்தார் என்றெண்ணி,
ஒன்றிய நோயொ(டு) இடும்பை பலகூர,
வென்றி முரசின் இரங்கி, எழில்வானம்
நின்றும் இரங்கும் இவட்கு. 35

ப-ரை: சென்ற நம் காதலர் - பிரிந்து சென்ற நம் தலைவர், சேண் - நெடுந்தூரத்தை, இகந்தார் - கடந்து சென்றார், என்று - என்று, எண்ணி - நினைத்து, ஒன்றிய நோயொடு - பொருந்திய பசலை நோயுடனே, இடும்பை பல - துன்பங்கள், கூர - மிகுதலால், இவட்கு - இவள் பொருட்டு, எழில்வானம் - எழுச்சியையுடைய மேகமானது, வென்றி - வெற்றியை அறிவிக்கும், முரசின் - முரசைப் போல, இரங்கி - இடித்து, நின்றும் - வானிடத்திருந்தும், இரங்கும் - மழை சொரிந்துநிற்கும்.

க-ரை: பிரிந்து சென்ற தலைவரை நினைத்து, பசப்பு மிகப் பெறுதலால், மேகம் இடிமுழங்கி மழை சொரியவும், இன்னும் வாராதிருக்கிறார். எவ்விதம் பொறுப்பாள் தலைவி.

முரசின் - இன் உவம உருபு. எழில் - எழுச்சி. 'வான் இரங்கும் இவட்கு' என்றதனால் வானே இரங்குகிறது. ஆனால் உரிமையுடையர் மனம் இரங்காதது ஏனோ' என்று வருத்தமிகுதியை வெளிப்படுத்துகிறது.

நல் விருந்து

தலைமகன் பாகனிடம், "செம்முல்லைகள் பூத்தன. ஆதலின் தலைவியின் ஊர் விருந்துகொண்டாடும் இடமாகும். விரைவிற் செல்வோம்," என்று கூறினான்.

சிரல்வாய் வனப்பின வாகி, நிரலொப்ப
ஈர்ந்தண் தளவம் தகைந்தன; — சீர்த்தக்க
செல்வம் மழைமதர்க்கண் சின்மொழிப் பேதைஊர்
நல்விருந்(து) ஆக நமக்கு. 36

ப-ரை: ஈர்ந்தண் - குளிர்ச்சி பொருந்திய, தளவம் - செம்முல்லைப் பூக்கள், சிரல் - சிச்சிலிப் பறவைகள், வாய் - வாய் போலும், வனப்பின ஆகி - அழகையுடையனவாகி, நிரல் - வரிசை, ஒப்ப - பொருந்த, தகைந்தன - அரும்பின; (ஆதலால்) சீர்த்தக்க - சிறந்த, செல்வம் - செல்வத்தையுடைய, மழை - மழைபோல், மதர்த்த கண் - குளிர்ந்த கண்களையும், சில் மொழி - மென்மையான மொழியையுமுடைய, பேதை - காதலியது, ஊர் - ஊரானது, நமக்கு நல் விருந்து ஆக - நம்க்கு நல் விருந்து கொண்டாடும்.

க-ரை: செம்முல்லை சிரிப்பது போல பூத்தன; ஆதலால் நமக்குத் தலைவியின் ஊரானது நல் விருந்து கொண்டாடும் இடமாகும்.

சிரல் - சிச்சிலிப் பறவை; மீன் குத்திப்பறவை. ஈர்ந்தண் - ஒரு பொருட் பன்மொழி. சீர்த்தக்க - ஒரு சொன்னீர்மைத்து. ஊர் விருந்தாக - வினை ஆற்றிவந்த தலைவன் தலைவியோடு விருந்தயரும் வழக்கம் பண்டு உண்டு. இதனை, ''வினைகலந்து வென்றீக வேந்தன் - மனைகலந்து மாலை அயர்கம் விருந்து' எனும் (குறள் - 1268) ஆல் அறிக. தளவம் - செம்முல்லை.

நீர்மேயும் மேகம்

தோழி தலைவியை நோக்கி, 'போர்த்தொழிலில் வல்லவரான நம் தலைவர், கார்காலம் தொடங்கியும் வாராதிருக்க மாட்டார். எவ்விதமும் வருவர் விரைவில்,' என்று ஆற்றுவித்தாள்.

கருங்கடல் மேய்ந்த கமம்சூழ் எழிலி,
இரும்கல் இறுவரை ஏறி உயிர்க்கும்;
பெரும்பதக் காலையும் வாரார்கொல்? வேந்தன்
அரும்தொழில் வாய்த்த நமர். 37

ப-ரை: கருங்கடல் - கரிய கடலின் நீரை, மேய்ந்த - பருகிய, கமம் - நிறைந்த, சூல் - கருவினையுடைய, எழிலி - மேகமானது, இரும்கல் - பெரியமலையின், இறுவரை - பக்கங்களின் மேல், ஏறி - ஏறிச்சென்று, உயிர்க்கும் - நீரைச் சொரியும், பெரும்பதக் காலையும் - மிக்க நல்ல சமய (கார்கால) த்தின்போது, வேந்தன் - அரசனது, அருந்தொழில் - போர்த்தொழில், வாய்த்த - (முடிவு) வாய்க்கப் பெற்ற, நமர் - நம் தலைவர், வாரார்கொல் - வாராதிருப்பரோ? (வாரா திரார்).

க-ரை: கடல் நீரையுண்டு, மலையிடத்தில் மழைபொழியும் கார்காலத்தில், வேந்தனது தொழில் முடிவுற்றிருப்பின் தலைவர் வாராதிரார்.

கடல் - முதலாகு பெயர். உயிர்த்தல் - ஈண்டு நீரைச் சொரிதலைக் குறித்தது. அருந் தொழில் முடிந்திராது, முடிந்திருப்பின் வாராதிரார் என்று ஆற்றுவித்த அருமையும் தலைவரின் பெருமையும் அறியத்தக்கது. மேய்ந்த - இலக்கணை.

வேழம் பிடியுடன் விளையாடல்

தோழி தலைவியிடம், 'வேழம் பிடியொடு விளையாடலைப் பார்த்தும் வாராதிரார். இதற்காக ஊடல் வேண்டாம்' என்று ஆற்றுவித்தாள்.

புகர்முகம் பூழிப் புரள, உயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ(டு) இசைந்தாடும்,
தண்பதக் காலையும் வாரார் எவன்கொலோ?
ஒண்தொடி ஊடு நிலை. ***38***

ப-ரை: உயர் நிலைய - உயர்ந்த தன்மையினையுடைய, வெம் சினம் வேழம் - கடிய கோபத்தினையுடைய ஆண்யானைகளின், புகர் முகம் - புள்ளிகளையுடைய முகமானது, பூழி புரள - புழுதியில் புரளும் நிலையில், பிடியோடு - பெண்யானைகளோடும், இசைந்து ஆடும் - சேர்ந்து விளையாடும், தண்பதம் காலையும் - தக்க நல் சமயத்தைப் பார்த்தும், வாரார் - நம் தலைவர் வாராரானார்; (ஆதலால்) ஒள் தொடி - ஒளி பொருந்திய வளையணிந்தவளே, ஊடு நிலை-(நீ அவருக்காக) பிணங்குவது, எவன் கொல் - என்ன காரணம்?

க-ரை: களிறு பிடியோடு விளையாடலைக் கண்டும் நம் தலைவர் வாராரானார். ஆதலால் அவருக்காகப் பிணங்குவது அழகல்ல.

பூழி - புழுதி. இசைந்தாடும் - இணைந்தாடும். 'தண் பதக் காலை' என்பதால் கார்காலமும், 'வேழம் பிடியோடிசைந்தாடும்' என்பதால் வருதற்குக் காரணமும் குறித்தவாராயிற்று. ஆனால், பருவத்தில் வாராமையால் பொய்ம்மையையும், பிடியோடிசைந்தாடலைக்கண்டும் வாராததால் அன்பின்மையையும் உடையாராயிற்று. இதனால் இத்தலைவருக்

காக வருந்தல் பயனில்லை என்பதை உள் நிறுத்திக் கூறி ஞள். இனி வாரார் கொல்லோ என இயைத்து, வருவர். நீ ஊடுதல் பொருந்தா எனவும் முடிக்க.

பொன்னேர்

தோழி தலைவியிடம், 'நொச்சிப் பூவைச் சூடி, பொன் னேர் பூட்டுவோர், நம் தலைவர்மேல் அலர் தூற்றலாயினர். ஆதலின் அதனைப்போக்க விரைவில் வருவர்' என்று ஆற்றுவித்தாள்.

அலவன்கண் ஏய்ப்ப அரும்(பு)ஈன்(று), அவிழ்ந்த
கரும்குரல் நொச்சிப் பசும்தழை சூடி,
இரும்புனம் ஏர்க்கடி கொண்டார்; பெருங்கெளவை
ஆகின்று நம்மூர் அவர்க்கு. 39

ப-ரை: அலவன்கண் - நண்டின் கண்ணினை, ஏய்ப்ப - ஒப்ப, அரும்பு ஈன்ற - அரும்பினைத் தந்து, அவிழ்ந்த - (பின்) மலர்ந்த, கரும் குரல் - கரிய பூங்கொத்தினையுடைய, நொச்சி - நொச்சியினது, பசும் தழை - பசிய தழையை, சூடி - சூடிக் கொண்டு, இரும்புனம் - பெரிய புனங்களில், ஏர்க்கடி - பொன் னேர் உழ, கொண்டார் - தொடங்கினுர்கள்; (ஆதலால்) நம் ஊர் - நம் ஊரினிடத்து, அவர்க்கு - நம் தலைவர்க்கு, பெரும் கெளவை ஆகின்று - பெரிய அலராயிற்று.

க-ரை: நொச்சிப் பூவைச்சூடி, உழவர் பொன்னேர் தொடங்கினுர்கள். ஆதலால் அலராயிற்று.

குரல் - பூங்கொத்து. ஏர்க்கடி - ஏர்க்கட்டு என்பதன் திரிபு; புதிதாய் ஏருழத் தொடங்குதல். இதனை - நல்லேர், பொன்னேர் என்பர். நொச்சிப் பூச் சூடி பொன்னேர் உழுதல் பண்டைய மரபு. அலரை அகற்ற விரைவில் வருவர் என்பது குறிப்பால் பெற்றது.

ஈந்து நிற எழிலி

தோழி தலைமகளை நோக்கி, 'தலைவர் கூறிய காலமும் வந்தது. நின் பசலைக்கு மருந்தாக அல்லவோ மேகமும் கரு நிறம் பெற்றது. அது மட்டுமா, நின் நுதல் கூட ஒளி பெறலாயிற்று. ஆதலின் பருவத்தை அறியும் அவர், விரைவில் வருவர்' என்று ஆற்றுவித்தாள்.

வந்தன செய்குறி வாரார் அவரென்று
நொந்த ஒருத்திக்கு நோய்தீர் மருந்தாகி,
இந்தின் கருவண்ணம் கொண்டன்(று) எழில்வானம்;
நந்தும்மென் பேதை நுதல்.

ப-ரை: மென்பேதை - மென்மைத் தன்மையுடைய பேதையே, செய்குறி - தலைவர் செய்த குறிகள், வந்தன - வந்துவிட்டன, அவர் வாரார் என்று - தலைவர் வரமாட்டா ரென்று, நொந்த ஒருத்திக்கு - துன்புற்ற நினக்கு, நோய்தீர் - அந்நோயைத் தீர்க்கும், மருந்தாகி - மருந்துமாகி, எழில் வானம் - அழகிய மேகமானது, இந்தின் - ஈச்சம்பழத்தின், கரு வண்ணம் - கரிய நிறத்தை, கொண்டன்று - கொண்டது; (ஆதலால்) நுதல் - நினது நெற்றி, நந்தும் - (இனி) ஒளிவள ரப் பெறும்.

க-ரை: தலைவர் செய்த குறிகள் வந்துவிட்டன. தலை வர் வாராரென்று வருந்திய தலைவிக்கு மருந்தாகி யல்லவோ மேகம் கருநிறம் பெற்றது. இனி நின் நுதலும் ஒளிபெறும்.

இந்து - ஈந்தென்பதின் குறுக்கல் விகாரம்; ஈச்சமரம். நந்தும் - வளரும். பிரிவால் நுதல் ஒளி அற்று இருத்தலும், வரின் நுதல் அழகுறலும் இயல்பாம். இதனையே தோழி நுதல் ஒளிவிடுமென ஆற்றுவித்தாள்.
